**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்**

**சட்ட கற்கைகள் திணைக்களம்**

**சட்டமாணி நிகழ்ச்சித்திட்டம்- மட்டம் 05**

**இறுதிப் பரீட்சை- 2020/2021(நிகழ்நிலை)**

**காணிச்சட்டம்-LLU5810/LWU3312**

**காலம்: 03 மணித்தியாலங்கள்**

---

திகதி: 06.09.2021 நேரம்: மு.ப 9.30- பி.ப 12.30

---

மொத்த வினாக்களின் எண்ணிக்கை: 05

**விடையளிக்க வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை: 04**

தெளிவற்ற கையெழுத்துக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. 2003 ஆம் ஆண்டு நெவில் உடகும்புர எனும் காணியை ஜயசேனவிடம் ஈடு வைத்ததுடன் 2006 ஆண்டு நிறைவின் போதும் குறித்த ஈடு செலுத்தப்படாது நிலுவையிலிருந்தது. ஜயசேன ஈட்டின் பாதுகாப்பு என்பதனடிப்படையில் உடகும்புரத்தின் மீதான உடைமையைத் தான் பெற்றுக் கொண்டார். 2005 ஆம் ஆண்டு நெவில் இறந்ததுடன் உடகும்புர உள்ளடங்களலாக அவரது அனைத்து ஆதனங்கள் மீதும் அவரது மனைவி, காந்தி மற்றும் 10 வயதுடைய மகன் ஆகியோர் வழியுரிமையின் மூலம் சொந்தத்தைப் பெற்றுக் கொண்டனர். தனது கணவரின் இறப்பின் பின், தனது மகனை அவளது பெற்றோரின் பராமரிப்பில் விட்டு, காந்தி குவைத்திற்கு வேலைக்காக சென்றாள். காந்தி 2009 ஆம் ஆண்டு இலங்கைக்கு திரும்பிய போதும் உடகும்புரயை பார்வையிட செல்லவில்லை. 2003ஆம் ஆண்டு தொடக்கம் ஜயசேன உடகும்புரையில் தொடர்ச்சியாக பயிர்ச்செய்து வந்தார். 2010 ஆம் ஆண்டு காந்தியின் சகோதரன் ஈட்டுத்தொகையை செலுத்த எத்தனித்தப் போதும ஈடு காந்தியினால் விடுவிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டு ஜயசேன பணத்தை ஏற்க மறுத்தான். 2011 ஆம் ஆண்டு காந்தியின் சகோதரரால் இருவாரங்களுக்குள் உடகும்புரை மீளக் கையளிக்கப்படாததன் போது ஜயசேன கொலை செய்யப்படுவார் என அடியாட்களைக் கொண்டு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டது. இதனால் அச்சமடைந்த ஜயசேன தனது மாமாவின் வீட்டிற்கு வதிவிற்கு சென்றதோடு மூன்று போகங்களாக

உடகும்புரையில் பயிர்செய்வதையும் தவிர்த்திருந்தான். அச்சுருறுத்தலின் பின்பும் காந்தியோ அவளது சகோதரரோ உடகும்புரையில் பயிர்செய்வதற்கோ அல்லது அதன் உடைமையை பெற்றுக் கொள்வதற்கோ எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. 2012 ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் ஜயசேன உடகும்புரைக்கு திரும்பியதோடு அங்கு குடியேறி மீளவும் பயிர்செய்கை நடவடிக்கைகளை ஆரம்பித்தான். பின் 2015 ஆம் ஆண்டு காந்தி இலங்கைக்கு திரும்பி வந்தவுடன், அவள் காணியை ஈட்டிலிருந்து விடுவிக்குமாறு ஜயசேனவிடம் வேண்டிக்கொண்ட போதும் அவன் காணியை விடுவிக்க மறுப்பு தெரிவித்தான். காந்தி தனக்காகவும் தனது மகனுக்காகவும் காணியின் மீதான சொந்தத்தைப் பாதுகாத்துக் கொள்ள வழக்குத் தொடுத்தாள். ஜயசேன குறித்த காணி முழுவதன் மீதும் தனக்கு ஆட்சியுரிமையின் அடிப்படையில் உரிமையுள்ளது என நீதிமன்றின் முன் தெரிவித்திருந்தான்.

2021 ஆம் ஆண்டு இவ்வழக்கை விசாரிக்கும் நீதிபதியாக உம்மை நீர் கருதிக்கொள்க. பொருத்தமான ஆதாரங்களின் அடிப்படையில் உமது தீர்மானத்தை எழுதுவதற்கு நீங்கள் வேண்டப்படுகின்றீர்கள்.

(25 புள்ளிகள்)

2. பின்வரும் நிகழ்வுகளை பொருத்தமான தீர்ப்புச்சட்டங்களை ஆதாரங்காட்டி ஆராய்க.

(I) நிகால் 20 ஆண்டுக் காலமாக பிரதான பாதையை அடைவதற்காக சுனிமாலின் காணியில் 6அடி பாதையை பாவித்து வருகின்றான். அண்மையில் நிகால் கார் ஒன்றை வாங்கியுள்ளதுடன் அதனை தற்போதுள்ள பாதையினூடாக ஓட்டமுடியாதுள்ளது, எனவே அவன் தற்போதைய 6அடி பாதையை 10அடி பாதையாக விரிவுப்படுத்திக்கொள்வதற்கான சாத்தியப்பாடுகளை தேடுகிறான்.

(II) கயானின் வீடு மதில் சுவற்றைக் கொண்டுள்ளதோடு அம்மதில் சுவரை திருத்துவதற்காக அயலவரான ரியாசின் காணியில் சாரக்கட்டொன்றை (Scaffolding/ பலஞ்சி) அமைக்க எண்ணுகிறான்.

(III) கமால் 15 ஆண்டுக் காலமாக பிரதான பாதையை அடைவதற்காக சமலின் காணியில் 6அடி அகலமான பாதையை பாவித்து வந்தான். அவனது முதுகலை பட்டப்படிப்பிற்காக கமல் மற்றும் அவனது குடும்பத்தார் 3 வருட காலத்துக்கு அவுஸ்த்திரேலியாவிற்கு சென்றிருந்தனர். கமல் இலங்கைக்கு திரும்பி வந்தவுடன், தனது வீட்டை அடைவதற்கு ஒரே வழியான குறித்த பாதையை தடுக்கும் வகையில் தற்காலிகமான கட்டிடமொன்றை சமல் கட்டியிருந்ததைக் கண்டுக்கொண்டான்.

(IV) ஹிக்கடுவை கடற்கரைக்கு அண்மையிலுள்ள வீடொன்றின் மீது சிரிசேன சொந்தம் கொண்டிருந்ததோடு அங்கிருந்து 25 வருட காலமாக கடலின் அழகிய காட்சியை தனது அயலவரான பெரேராவின் வெற்று காணியினூடாக பார்த்து அனுபவித்து வந்தான். சிரிசேன பெரேராவின் காணியினூடான நடைப்பாதையையும் கடற்கரையை அடைய பாவித்து வந்தான். அண்மையில் பெரேரா தனது காணியில் பல்மாடி ஹோட்டலொன்றை கட்டவுள்ளதாக தனது எண்ணத்தை தெரிவித்திருந்ததோடு சிரிசேன குறித்த கட்டுமானம் தனது கடற்காட்சி, காற்றோட்டம், சூரியஒளி, மற்றும் கடற்கரையை அணுகல் என்பவற்றிற்கு தடையாக அமையும் என ஐயம்கொள்கிறார்.

(V) பிரியால் தனது பெற்றோர்களிடமிருந்து வெற்றுக் காணியொன்றை வழியுரிமையின் மூலம் பெற்றுக் கொண்டுள்ளதோடு நிலத்தால் சூழப்பட்ட அக்காணிக்கு எந்வொரு பாதை உரிமையும் பதிவுச் செய்யப்பட்ட உறுதியின் மூலம் வழங்கப்படவில்லை.

(25 புள்ளிகள்)

3. குருநாகலையில் 150பர்ச் காணிக்கு சொந்தக்காரனான நிமல் 2014 ஆம் ஆண்டு தனது காணியை பிரசன்ன எனும் தச்சனுக்கு 03 வருட காலத்துக்கென குத்தகைக்கு வழங்கியிருந்தான். குத்தகைக்கு விடப்பட்டதன் போது குறித்த காணியின் ஒரு பகுதியில் கோப்பி பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிமல் மற்றும் பிரசன்ன ஆகியோரிடையில் தேவையேற்படின் குத்தகைக் காலமானது நீடிக்கப்படலாம் எனும் வாய்மொழி ஒப்பந்தமொன்றும் காணப்பட்டது. பிரசன்ன குறித்த காணியை குத்தகைக்கு எடுத்ததன் பின்பு தனது தச்சு வேலைகளை மேற்கொள்வதற்காக இரும்பு

தூண்களின் மீது தகடுகளாலான கூரையைக் கொண்ட கட்டிடத்தை அமைத்துக் கொண்டான். கட்டிடத்தின் முற்புற சிறிய பகுதி கடைத்துண்டொன்றிற்காக ஒதுக்கப்பட்டதோடு பிரசன்ன அதனை கண்ணாடிகளால் மூடியமைத்திருந்தான். மேலும் காணியின் வாயிற்கருகிலுள்ள சிமேந்து சுவரில் கலைத்துவமிக்க மரச்செதுக்கலொன்று பொருத்தப்பட்டது.

பயிர்செய்கையாளரான பிரசன்னவின் மனைவி, ஏற்கனவேயிருந்த கோப்பி பயிர்செய்கையை மேலும் மேம்படுத்தியதோடு 2015 ஆம் ஆண்டு காணியின் ஒரு பகுதியில் ஆக்கிட் பயிரிடவும் ஆரம்பித்தாள். பயிர்செய்கைக்கான நீரைப் பெற்றுக்கொள்வதற்காக நீர் தெளிப்பான் அமைப்பு மற்றும் டயிலிடப்பட்ட நீர் தொட்டி என்பனவும் காணியில் அமைக்கப்பட்டது.

2016ஆம் ஆண்டளவில் பிரசன்னவின் தச்சு வேலை பாரிய இரைச்சல் சத்தத்தை ஏற்படுத்துவதாகவும் சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் அயலவர்கள் நிமலை குற்றம் சாட்ட ஆரம்பித்தனர். 2017ஆம் ஆண்டு அயலவர்களின் தொடர்ச்சியான புகார்களை கேட்டு மன அழுத்தத்திற்குள்ளாகிய நிமல், குத்தகைக்கால நிறைவின் பின் உடனடியாக காணியிலிருந்து வெளியேறுமாறு கூறியிருந்தான். பிரசன்ன மேலும் மூன்றாண்டு காலத்திற்கு குத்தகையை நீடிக்க கோரியிருந்த போதும் நிமல் அதனை மறுத்து காணியை விட்டு வெளியேற கூறினான். பின், பிரசன்ன தாங்கள் காணியில் மேற்கொண்ட முன்னேற்றங்கள் மற்றும் பயிர்செய்கைகளுக்குமான நட்ட ஈட்டைக் கோரிய போதும் அவை தற்போது காணியிலிணைந்து அதன் அங்கமொன்றாகவே மாறிவிட்டதெனக் குறிப்பிட்டு நட்ட ஈடு கொடுக்க நிமல் மறுத்துவிட்டான். தான் மேற்கொண்ட சகல முன்னேற்றங்களுக்குமான நட்ட ஈடு செலுத்தப்படும் வரை காணியிலிருந்து வெளியேற பிரசன்ன மறுப்பு தெரிவிக்கின்றான்.

I. பொருத்தமான காணிச்சட்ட கருத்தேற்புகளுக்கு மட்டும் கவனம் செலுத்துவதனூடாக திறத்தவர்களின் உரிமைகள் மற்றும் கடப்பாடுகளை ஆராய்க.

(15புள்ளிகள்)

II. 2016ஆம் ஆண்டே அயலவர்களது புகார் காரணமாக நிமல் பிரசன்னவை காணியிலிருந்து வெளியேற்றினான் என கருதிக்கொள்க. அத்தகையதொரு சந்தர்ப்பத்தில் பிரசன்னவிற்கு இலங்கை காணிச்சட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ள கூடியதான நிவாரணங்களை ஆராய்க.

(10 புள்ளிகள்)

4. **அ மற்றும் ஆ ஆகிய இரண்டு பகுதிகளுக்கும் விடையளிக்குக.**

**அ பகுதி**

‘‘கூட்டுச் சொந்தக்காரர்கள் பிரிக்கப்படாத நிலத்தின் ஒவ்வொரு அங்குல பங்கிற்கும் உரித்தைக் கொண்டவர்கள்’’ என சட்டம் அங்கீகரிப்பதனால் தான் காணிச்சட்டத்தின் பொதுக் கொள்கைகள் எப்போதும் கூட்டுச் சொந்தக்காரர்கள் மீது வேறுபட்ட வகையில் பிரயோகிக்கப்படுகின்றது. காணிச்சட்டத்தின் **இரு பிரிவுகளை மட்டும்** தெரிவு செய்து மேற்கூறப்பட்ட கூற்றை தர்க்க ரீதியாக மதிப்பீடு செய்க. பொருத்தமான தீர்ப்புச்சட்டங்களைக் கொண்டு உமது விடையை ஆதாரப்படுத்துக.

(17 புள்ளிகள்)

**ஆ பகுதி** – பின்வரும் நிகழ்வுகளைப் பொருத்தமான தீர்ப்புச்சட்டங்களைக் கொண்டு ஆராய்க.

I. சாந்த தான் இதுவரை வழியுரிமை கீழ் முறையாக சொந்தம் கொள்ளாத காணியை 2018ஆம் ஆண்டு ஈடு வைத்து 3 மில்லியன் ரூபா பணத்தை சில்வாவிடமிருந்து பெற்றுக் கொண்டான். 2020ஆம் ஆண்டு சாந்தவின் பெற்றோர் இறந்ததன் பின் குறித்த காணி வழியுரிமையின் மூலம் சாந்தவிற்கு கிடைக்கப்பெறுகின்றது. சில்வா ஈடு காலத்தின் முடிவிலும் ஈடு செலுத்தப்படாமை காரணமாக வழக்கு தொடர எண்ணுகிறான்.

(04 புள்ளிகள்)

II. பிரசாத் 2015ஆம் ஆண்டு முறையாக பதிவு செய்யப்பட்ட ஈட்டு முறியின் கீழ் தனது காணியை இலங்கை வங்கியில் ஈடு வைத்து பெற்றுக்கொண்ட

6 மில்லியன் ரூபாவைக் கொண்டு ஆடை வணிகமொன்றை ஆரம்பித்தான். ஈடு காலம் 6 வருடங்கள் என்பதோடு அவனது சுகயீனம் காரணமாக வணிக நடவடிக்கையில் சரிவு ஏற்பட்டது. 6வருட இறுதியில் பிரசாத்தினால் ஈடு தொகை செலுத்த முடியாது போனது. இலங்கை வங்கி பணத்தை மீளப்பெற்றுக்கொள்வதற்கு இலகுவான வழிமுறையொன்றை நோக்குகின்றது.

(04 புள்ளிகள்)

5.

(I) ''1927 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க ஆவணங்களை பதிவு செய்வதற்கான கட்டளைச்சட்டம், தமது உரிமைகள் மீது சிரத்தை மற்றும் அக்கறை கொண்டு தமது உறுதிகளை முறையாக பதிவு செய்யும் நபர்களுக்கு **முழுமையான** பாதுகாப்பை வழங்குகின்றது.''
மேற்கூறிய கூற்றுடன் உடன்படுகின்றீர்களா? உமது விடையை பொருத்தமான நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச்சட்டங்களைக் கொண்டு விளக்குக.

(15 புள்ளிகள்)

(II) 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்து பதிவு செய்தல் சட்டமானது ஆவணங்களை பதிவு செய்யும் முறையின் கீழான சகல குறைப்பாடுகளையும் நிவர்த்தித்துள்ளது என கருதுகிறீர்களா? அல்லது 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்து பதிவு செய்தல் சட்டத்தை வலுப்படுத்த மேலும் முன்மொழியக் கூடிய பரிந்துரைகள் ஏதேனும் உள்ளதா? காரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

*பதிப்புரிமை பாதுகாக்கப்பட்டுள்ளது*